செ.வெ.எண்: 19-2020 நாள்: 11.11.2020

**விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மற்றும் விழுப்புரம் நகராட்சிகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக ரூ.531 கோடி மதிப்பீட்டில் புதிய பாதாள சாக்கடை திட்டப்பணிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் பூமி பூஜை மூலம் துவக்கி வைத்தார்.**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மற்றும் விழுப்புரம் நகராட்சிகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக ரூ.531 கோடி மதிப்பீட்டில் புதிய பாதாள சாக்கடை திட்டப்பணிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் பூமி பூஜை மூலம் இன்று (11.11.2020) துவக்கி வைத்தார்.

திண்டிவனம் நகராட்சி 22.33 ச.கி.மீ கொண்ட மிகப்பெரிய நகராட்சியாக 33 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது. 2011 கணக்கெடுப்பின்படி 72,796 மக்கள் திண்டிவனம் நகராட்சியில் வசித்துவருகின்றனர். திண்டிவனம் நகராட்சியின் தெருக்களின் நீளமானது 174.50 கி.மீ ஆகும். திண்டிவனம் நகராட்சியினை மேம்படுத்திடும் நோக்கில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது திண்டிவனம் நகராட்சியினை 9 பகுதிகளாக பிரிக்கப்பட்டு 6740 எண்ணிக்கையிலான ஆள்நுழை குழிகள் மற்றும் 20,000 வீட்டிணைப்புகள், 3000 வணிக இணைப்புகள் அமைக்கும் வகையில் ரூ.268 கோடி மதிப்பீட்டில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 6 துணை கழிவுநீர் உந்து நிலையங்கள், 3 கழிவு நீர் தூக்கி நிலையங்கள் (Lift Station) 4 கழிவுநீர் தூக்கி ஆள்நுழை குழிகள் (Lift Man Holes) மற்றும் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டமானது (2052-ஆம் ஆண்டு ) இடைநிலை மக்கள் தொகையினை கணக்கில்கொண்டு நகராட்சியினை சேர்ந்த 84,087 பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் விழுப்புரம் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட வழுதரெட்டி, சாலாமேடு, காகுப்பம், எருமணந்தாங்கல் மற்றும் பானாம்பட்டு உள்ளிட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் 12,150 வீட்டு இணைப்புகள் மற்றும் 2000 வணிக இணைப்புகள் அமைக்கும் வகையில் ரூ.263 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் 3 பிரதான கழிவுநீர் உந்து நிலையங்கள், 7 கழிவு நீர் தூக்கி நிலையங்கள் (Lift Station), 7 கழிவுநீர் தூக்கி ஆள்நுழை குழிகள் (Lift Man Holes) இத்திட்டமானது இடைநிலை மக்கள் தொகையினை கணக்கில்கொண்டு (2022-ஆம் ஆண்டு) 50,700 பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படவுள்ளது.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதி மற்றும் பொது நிதித்திட்டத்தின் கீழ் தண்ணீர் மெத்தை ஒன்றின் மதிப்ப ரூ.3200 வீதம் 16 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.51,200 மதிப்பீட்டிலும், காற்று மெத்தை ஒன்றின் மதிப்பு ரூ.3475 வீதம் 22 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ76,450 மதிப்பீட்டிலும் மற்றும் ஒரு மாற்றுத்திறனாளிக்கு பேட்டரியால் இயங்கும் அதிநவீன சக்கர நாற்காலி ரூ.99,999 மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.2,27,649 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மல்லர்கம்பம் விளையாட்டு போட்டிகளில் தேசிய அளவில் வெற்றி பெற்ற அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எம்.ஆர்.முத்தமிழ்ச்செல்வன் (விக்கிரவாண்டி), திருமதி.சீத்தாபதி சொக்கலிங்கம் (திண்டிவனம்), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்பார்வை பொறியாளர் திரு.பழனிவேல், செயற்பொறியாளர் திரு.அன்பழகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.முனுசாமி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.பி.வேல்முருகன், மாவட்ட ஆவின் தலைவர் திரு.பேட்டை வி.முருகன், விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பண்டகசாலை தலைவர் திரு.பசுபதி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.